**திறன்கள் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - 2021**

திறன்கள் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 மே 27 ஆந் திகதிய 3119 எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) மற்றும் 3120 எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கைகளின் 4.04(அ) பிரிவின் IV ஆம் உறுப்புரை மற்றும் 2018 மே 11 ஆந் திகதிய 3650 எஸ்ஆர்ஜ (சீஓஎல்) மற்றும் 3651 எஸ்ஆர்ஜ மேலதிக நிதி உடன்படிக்கைகள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சாகவிருந்த தற்போதைய கல்வி அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் நிகழ்ச்சித்திட்டத்தின் 10 அமுல்ப்படுத்தல் முகவர்கள் காணப்படுகின்றனர். 2020 ஆம் ஆண்டளவில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழிலாளர் சந்தை கேள்வியை எதிர்கொள்வதற்கு வினைத்திறனான திறன்கள் கல்வி முறைமையை கட்டியெழுப்புதல் மற்றும் தொழிற்கல்வி பயிற்சி மற்றும் ஆதரவான கொள்கைகள், முறைமைகள் மற்றும் கட்டமைப்புக்கள் என்பவற்றிற்கான தரம், பொருத்தத்தன்மை, நுழைவு, இனங்காணல் என்பவற்றை மேம்படுத்துதல் என்பன நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்களாகும். நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகள் பெறுபேறுகள் அடிப்படையிலான கடனளிப்பு முறை மூலக்கூறின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்றன. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 141,524.23 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 1,061.2 மில்லியனாகக் காணப்பட்டதுடன் அதில் ரூபா 28,708.23 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் ஐ.அ.டொலர 200 மில்லியன் மற்றும் ரூபா 13,100 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 100 மில்லியன் முறையே ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் சர்வதேச அபிவிருத்தி சங்கம் ஆகியவற்றால் நிதியளிக்கப்படுவதற்கு இணக்கம் காணப்பட்டது. ஐ.அ.டொலர் 761.2 மில்லியன் மிகுதி தொகை ஜேர்மன் அரசாங்கம், கொரியாவின் எக்ஸிம் வங்கி ஏனையவர்கள் மற்றும் இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிக்கப்பட்டது. செயற்திட்டம் அதன் செயற்பாடுகளினை 2014 செப்தெம்பரில் ஆரம்பித்திருந்ததுடன் 2022 யூன் 30 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

திறன்கள் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் மொத்த செலவின ஒருங்கிணைந்த கூற்றானது 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 11 முகவர்களின் நிதிக்கூற்றுக்களில் வழங்கப்பட்ட தகவல்களுடன் இணங்கி நிகழ்ச்சித்திட்டத்தின் மொத்த செலவின ஒருங்கிணைந்த கூற்றை உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் மொத்த செலவின ஒருங்கிணைந்த கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 மொத்த செலவின ஒருங்கிணைந்த கூற்றிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

---

மொத்த செலவின ஒருங்கிணைந்த கூற்றை 11 முகவர்களின் நிதிக்கூற்றுக்களில் வழங்கப்பட்ட தகவல்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட மொத்த செலவின ஒருங்கிணைந்த கூற்றைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது. நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 மொத்த செலவின ஒருங்கிணைந்த கூற்றின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் மொத்த செலவின ஒருங்கிணைந்த கூற்று விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த மொத்த செலவின ஒருங்கிணைந்த கூற்றை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்:

- மோசடி அல்லது தவறு காரணமாக மொத்த செலவின ஒருங்கிணைந்த கூற்றிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிகழ்ச்சித்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக மொத்த செலவின ஒருங்கிணைந்த கூற்றின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை மொத்த செலவின ஒருங்கிணைந்த கூற்று பிரதிநிதித்துவம் செய்கின்றதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. மொத்த செலவின ஒருங்கிணைந்த கூற்றின் மீதான கருத்துரைகள்

### சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| இல | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை | இணங்காமை | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபாரிசு |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பெறுகை வழிகாட்டிகளின் 5.4.8 ஆம் பிரிவு. | பெறுகை நிறுவனமானது பெறுகை முகவராண்மையை பாதுகாப்பதற்காக செயலாற்றல் பிணையாக மதிப்பிடப்பட்ட ஒப்பந்தத் தொகையில் ஐந்து சதவீதத்தை விட குறையாத தொகையை பிடித்துவைத்திருக்க வேண்டும். வழிகாட்டிகளுக்கு முரணாக தேசிய இளைஞர் சேவைகள் சபையானது மொனராகலை பயிற்சி மத்திய நிர்மாணச் செயற்திட்டத்தின் 2017 இன் ஒப்பந்தப்பெறுமதியை ரூபா 129.9 மில்லியனிற்கு அதிகரித்ததுடன் ரூபா 1,999,407 பெறுமதியானது குறைவாகப் பெறப்பட்டிருந்தது. | கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை. | வழிகாட்டிகளின் பிரகாரம் இணங்க வேண்டும். |
| (ஆ) | 2017 ஒக்தோபர் 25 இன் டீஎம்எஸ்/சுற்றறிக்கை க/2017 ஆம் இலக்க நிதி மற்றும் வெகுசன ஊடாக அமைச்சின் சுற்றறிக்கைகள் மற்றும் 05/2017 ஆம் இலக்க முகாமைத்துவ | உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை, பயிற்சி மற்றும் வழிகாட்டும் சேவைகளுக்காக உத்தியோகத்தர்களுக்கு அதிகூடியளவில் ரூபா 5,000 மாதமொன்றுக்கு செலுத்துவதற்கு வசதியளிக்கப்பட்டது. எனினும், 09 மாகாண சபைகள் மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் சபையின் மகரகம பயிற்சி நிலையங்களின் 58 | கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கைகளின் பிரகாரம் இணங்க வேண்டும். |

| | |
|---|---|
| சேவைகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை. | உத்தியோகத்தர்களுக்கு ரூபா 253,600 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் | முகாமைத்துவ பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ஆசிய அபிவிருத்தி வங்கியின் 3650 மற்றும் 3651 ஆம் இலக்க கடன் பெறுகைகளின் கீழ் அமுல்ப்படுத்தப்பட வேண்டிய 9 பணவளிப்பு இணைப்பு குறிகாட்டிகளின் கீழ் 51 நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியிருந்த போதும் 08 நடவடிக்கைகளின் இலக்குகள் மீளாய்வாண்டில் உள்ளவாறு அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லையென்பதுடன் 85 சதவீதம் மாத்திரம் இலக்கொன்றினால் பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. | பாதீட்டு ஒதுக்கீடு போதாமை, காசுப்பாய்ச்சல் வரையறைகள், வரையறுக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர் இருந்தமை மற்றும் கொவிட்-19 தொற்றுநோய் நிலைமை காரணமாக பயிற்சி நிலையங்கள் மற்றும் தொழில்துறை பகுதியளவில்/முழுமையாக மூடப்படுதல் போன்ற காரணங்களால் 08 இலக்குகளினை அடைதலானது தாமதமடைந்திருந்தது. | ஏடிபீ கடன் உடன்படிக்கைகளின் கீழான டீஎல்ஜஎஸ் இன் மிகுதி செயற்பாடுகள் தொடர்பாக இலக்குகளை அடைந்துகொள்வதற்கு முகாமைத்துவம் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |
| (ஆ) | திறன்கள் துறை அபிவிருத்திப் பிரிவு ஐ.அ.டொலர் 23 மில்லியனை வழங்கியிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் செயற்திட்ட காலப்பகுதி முடிவடைந்திருந்த போதும் ஐ.அ.டொலர் 11.3 மில்லியன் சேகரிக்காமலிருந்தது என அவதானிக்கப்பட்டது. | 2022.03.31 இல் உள்ளவாறு ஐ.அ.டொலர் 7 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. மிகுதி ஐ.அ.டொலர் 4 மில்லியன் செயற்திட்ட நீடிக்கப்பட்ட காலப்பகுதியின் போது வழங்கப்பட வேண்டியிருந்தது. | நிதியங்களைப் பயன்படுத்துவதில் வினைத்திறமையீன்மை காணப்பட்டமையால் நிகழ்ச்சித்திட்டத்தின் இலக்குகளை அடைவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2021 ஆம் ஆண்டின் போது வேலையுடன் இணைந்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களிற்காக ரூபா 79 மில்லியன் தொகையை செயற்திட்ட கண்காணிப்புப் பிரிவு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் எதிர்பார்க்கப்பட்ட 2000 மேலதிக பயிற்சியாளர்களை வேலைக்கு அமர்த்துவதற்கான ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. இந்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்காக வேலைக்கமர்த்தப்பட்ட பயிற்சியாளர்களின் மொத்த | ஈஎல்ரீபி இலுள்ள தெரிவு செய்யப்பட்ட துறைகளுக்காக உயர்கேள்வியிருந்தமையால் (நிர்மாணம், உற்பத்தி, சுற்றுலா, சுகாதாரப்பராமரிப்பு, ஏனையவை) பயிற்சியாளர்களில் சிலர் வேலை வாய்ப்புக்களை பெற்றுக்கொண்டதுடன் சான்றிதழ்களைப் பெறுவதற்கு முன்னர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்து சிலர் விலகவேண்டியிருந்தது. ஆகையால், வழங்கப்பட்ட | நிகழ்ச்சித்திட்டத்தின் இலக்குகளை அடைந்து கொள்வதற்காக பயிற்சிகளை திட்டமிட்டு அமுல்படுத்துவதற்கு முகாமைத்துவம் தேவையான நடவடிக்கையை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எண்ணிக்கை 8419 ஆகவிருந்ததுடன் அதில் 3,161 மாணவர்கள் பாடநெறியிலிருந்து விலகியிருந்தனர். | சான்றிதழ்களின் எண்ணிக்கை உட்சேர்க்கப்பட்ட எண்ணிக்கையிலும் குறைவாகவிருந்தது. | |
| (ஈ) | தொழில்துறை நிறுவனங்களில் பணிபுரியும் பதவியணியினரின் திறன்களை மேம்படுத்தி சான்றளிக்கப்பட்டவர்களின் திறன் இடைவெளியை குறைக்கும் நோக்கத்துடன் நெகிழ்வான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களிற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 17.5 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அதில் ரூபா 5 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் தொழில்துறையில் திறன்களை தரமுயர்த்தும் நெகிழ்வான பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் ஆகக்குறைந்தது 2000 மேலதிக பணியாளர்கள் பங்குபற்றுவதை 2021 இல் இலக்காக கொண்டிருந்தாலும் 2021 ஆம் ஆண்டின் இறுதியளவில் 1,175 தொழில்துறை பணியாளர்களுக்கு மாத்திரம் பயிற்சி வழங்கப்பட்டிருந்தது. | காசுப்பாய்ச்சல் வரையறைகள் மற்றும் கொவிட்-19 தொற்றுநோய் நிலைமை காரணமாக பயிற்சி நிலையங்கள் மற்றும் தொழில்துறை பகுதியளவில்/முழுமையாக மூடப்படுதல் போன்ற காரணங்களால் நெகிழ்வான பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பாதீட்டைப் பயன்படுத்தமுடியாதிருந்தது. | எதிர்பார்க்கப்பட்ட விளைவை அடைந்துகொள்வதற்கு முகாமைத்துவம் கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது |

## 3.2 செயற்பாட்டு வினைத்திறமையீன்மைகள்

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபாரிசு |
|---|---|---|---|
| (அ) | செயன்முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம், தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்திற்கு பட்டப்பின் படிப்பு பாடநெறிக்காக 32 மாணவர்கள் சேர்க்கப்பட்டதுடன் 12 மாணவர்கள் மாத்திரம் பாடநெறியைப் பூர்த்திசெய்திருந்தனர். | கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை. | நிகழ்ச்சித்திட்டத்தின் இலக்குகளை அடைந்து கொள்வதற்காக பயிற்சிகளை திட்டமிட்டு அமுல்படுத்துவதற்கு முகாமைத்துவம் தேவையான நடவடிக்கையை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சீரமைக்கப்பட்ட செயல்நடவடிக்கைத்திட்டத்தின் பிரகாரம், தொழில்சார் பயிற்சி அதிகாரசபையின் ‘‘றெகவறனி’’ பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 1 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும், 61 பயிற்சியாளர்கள் மாத்திரம் வேலைக்கமர்த்தப்பட்டிருந்ததுடன் ஒதுக்கப்பட்ட தொகையில் ரூபா 536,000 | ‘‘றெகவறனி’’ பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் நிதிசார் செயன்முன்னேற்றம் மீதான கணக்காய்வு அவதானிப்புக்களுடன் நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவம் இணங்குகின்றது. | நிகழ்ச்சித்திட்டத்தின் இலக்குகளை அடைந்து கொள்வதற்காக முகாமைத்துவம் தேவையான நடவடிக்கையை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அல்லது 53.6 சதவீதம் மாத்திரம் செலவழிக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் யூஓவீரி மற்றும் யூசிஎஸ் இன் உத்தியோகத்தர்களால் நடாத்தப்பட்ட கல்விசார் ஆராய்ச்சிகள் மற்றும் புத்தாக்க செயற்திட்டங்களிற்காக ரூபா 4 மில்லியன் தொகையொன்று ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும், நிதிசார் செயன்முன்னேற்றம் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் 5 செயற்திட்ட பிரேரணைகள் மாத்திரம் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்வதற்காக முகாமைத்துவம் தேவையான நடவடிக்கையை எடுக்க வேண்டும். |
| (ஈ) | புதிதாக வேலைக்கமர்த்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு ஆரம்ப பயிற்சியினை வழங்குவதற்கும் அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு 21/2 மாதங்கள் பயிற்சியினை வழங்குவதற்கும் ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் தேசிய இளைஞர்கள் சேவைகள் சபை மற்றும் தொழில்சார் பயிற்சி புதிய ஆட்சேர்ப்புக்களுக்கு கவனஞ்செலுத்தியிருக்காததுடன் தொழில்சார் பயிற்சி அதிகாரசபையானது புதிதாக ஆட்சேர்க்கப்பட்ட ஆலோசகர்களுக்காக தொடக்க பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தியிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்வதற்காக முகாமைத்துவம் தேவையான நடவடிக்கையை எடுக்க வேண்டும். |
| (உ) | திறன்கள் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமானது 2014 இல் தொடங்கப்பட்டிருந்ததுடன் 2021 யூன் 30 அளவில் 100 சதவீதம் பூர்த்தியடைவதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது. எனினும், இலக்குகளை அடைவதற்கு தவறியமையால் செயற்திட்ட காலப்பகுதி 2022 யூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது. அதன் விளைவால், இன்றுவரை இது பொறுப்பாகவிருப்பதால் திறைசேரியானது ஐ.அ.டொலர் 4 மில்லியனை அறவிடமுடியாதிருந்தது. செயற்திட்டத்தினை ஒரு வருடத்தால் நீடித்தமையால் உத்தியோகத்தர்கள் சம்பளங்கள் மற்றும் படிகள் உள்ளடக்கி மீண்டுவருஞ்செலவீனங்கள் அதிகரித்திருக்கக்கூடுமென்பதுடன் அரசாங்கமானது செயற்திட்டத்தின் உண்மையான நன்மைகளை பெற்றுக்கொள்ள முடிந்திருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டின் காலப்பகுதியிலிருந்து 2021 ஆம் ஆண்டு காலப்பகுதியின் போது அமுல்படுத்தவேண்டியிருந்த நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகள் கொவிட் - 19 பரவாலால் குறிப்பிடப்பட்ட காலப்பகுதியின் போது பயிற்சி நிலையங்களை முழுமையாக அல்லது பகுதியளவில் மூடியிருந்தமையால் கடுமையாக பாதித்திருந்தது. | கடன் காலப்பகுதியினுள் நிகழ்ச்சித்திட்டத்தின் இலக்குகளை அடைந்து கொள்வதற்காக முகாமைத்துவம் தேவையான நடவடிக்கையை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்திலுள்ள பயிற்சி நிலைய முகாமைத்துவ உயர்தர தேசிய டிப்ளோமா பாடநெறி நிகழ்ச்சித்திட்டத்திற்காக முப்பத்தி இரண்டு மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 2 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும், 2021 திசெம்பர் 15 இல் உள்ளவாறு அதன் நிதிச் செயன்முன்னேற்றம் 12 சதவீதமாகவிருந்தது. அத்துடன், ரூபா 1 மில்லியன் தொகையொன்று 16 மாணவர்களை இலக்காககொண்டு பட்டப்பின் படிப்பு புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்தமையால் நிகழ்ச்சித்திட்டத்திற்காக நிதிசார் செயன்முன்னேற்றம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்வதற்காக முகாமைத்துவம் தேவையான நடவடிக்கையை எடுக்க வேண்டும். |
| (எ) | இரத்மலானை பல்கலைக்கழகத்தின் திறன்கள் துறை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2021 ஆம் ஆண்டிற்காக 4 ஒப்படைகளிற்காக ரூபா 10 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது அவதானிக்கப்பட்டதுடன் இயக்குனர் சபையானது ஒரு ஒப்படை தவிர்ந்த ஏனைய ஒப்படைகளிற்காக அனுமதி கொடுக்கப்பட்டிருந்ததுடன் எனினும் ஒப்படைகள் கணக்காய்வுசெய்யப்பட்ட வருடத்தின் கீழ் இதுவரை பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்வதற்காக முகாமைத்துவம் தேவையான நடவடிக்கையை எடுக்க வேண்டும். |
| (ஏ) | பல்கலைக்கழக பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படாத சந்தர்ப்பங்களிருந்தமையால் பல்கலைக்கழகக் கல்லூரியில் என்பீகியூ 5,6 மட்ட பாடநெறிகளை பூர்த்திசெய்திருந்த மற்றும் தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் பட்டப்பாடநெறிகளிற்காக விண்ணப்பித்திருந்தோர் போன்றோருக்கு அவர்கள் கற்ற பாடங்களுடன் தொடர்புடைய பட்டப் பாடநெறிகளை தொடருவதற்கு சந்தர்ப்பமிருந்தது. | கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்வதற்காக முகாமைத்துவம் தேவையான நடவடிக்கையை எடுக்க வேண்டும். |

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபாரிசு |
|---|---|---|---|
| (அ) | திறன்கள் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2017 இல் ரூபா 1226.78 மில்லியன் பெறுமதியான நான்கு செயற்திட்டம் தொடங்கப்பட்டிருந்தது. எனினும், 2022 பெப்ரவரி அளவில் நிர்மாணங்கள் பூர்த்திசெய்யப்பட்டிருக்காததுடன் 5 மாதங்களிலிருந்து தொடக்கம் 2 வருடங்கள் வரையான காலப்பகுதிக்காக காலதாமதத்தை ஏற்படுத்தியது. | திறன்கள் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழுள்ள நான்கு நிர்மாணச் செயற்திட்டத்தின் நிலைமை.<br>- கொவிட் மற்றும் மூலப்பொருட்கள் கிடைக்காமையால் காலதாமதமாகியது.<br>- மந்தமான செயன்முன்னேற்றத்தால் இணக்கமான தீர்வு திட்டமிடப்பட்டது.<br>- வேலை நிறுத்தப்பட்டதுடன் வாடிக்கையாளருக்கு எதிராக வழக்கொன்று தொடரப்பட்டது. | நிர்மாண வேலைகளை துரிதப்படுத்துவதற்கு முகாமைத்துவம் கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 2017 மற்றும் 2018 இல் ரூபா 348 மில்லியன் தொகையான இரண்டு நிர்மாண செயற்திட்டங்கள் தொடங்கப்பட்டதுடன் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. எனினும், அவைகள் வருடமொன்றிற்கு மேலாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்பார்க்கப்பட்ட பயிற்சியினை வழங்குவதற்காக கட்டிடத்தின் செயற்பாடுகளை தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | திறன்கள் துறை அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழான கேகாலை மாவட்ட தொழில்சார் பயிற்சி நிலையத்தின் நிர்மாணத்துடன் தொடர்புடைய மதிப்பீட்டு வேலையானது அதனுடன் இணங்காத விலைமனுவொன்றை தெரிவுசெய்யப்பட்ட விலைமனுதாரர் சமர்ப்பித்தமையால் தவறான பொறியியல் மதிப்பீட்மைட அடிப்படையாக கொண்டு இருந்தமையால் 3 மில்லியன் நட்டத்தை ஏற்படுத்தியதுடன் ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதுடன் தொடர்புடைய பௌதீக அளவீடுகளை எடுக்கும்போது ரூபா 4.8 மில்லியன் மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை. | உரிய தரப்பினரை விசாரணை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.4 விளைவற்ற வளங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| பற்றான்கல பல்கலைக்கழகத்திற்கு 2015 ஓகஸ்ட் 24 இல் செயற்திட்டத்தால் வழங்கப்பட்ட ரூபா 464,400 தொகையான குளியலறை உபகரணங்கள் 2022 சனவரி 31 வரை விளைவற்றதாகவிருந்தது. | கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கனைப் பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கையை முகாமைத்துவம் எடுக்க வேண்டும். |

## 3.5 மனித வளங்களுடன் தொடர்புடைய விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| பெறுகை நிபுணர், உதவி பெறுகை நிபுணர், சிவில் பொறியியல் சுற்றாடல் பாதுகாப்பு உத்தியோகத்தர் மற்றும் உள்ளகக் கணக்காய்வாளர் உள்ளடங்கலான பதினொரு பதவிகள் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு 01 தொடக்கம் 04 வருடங்கள் காலப்பகுதிக்கு வெற்றிடமாகவிருந்தது. | நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகளின் கோரிக்கையை அடிப்படையாகக் கொண்டு பதவியணி நிலைமைகள் நிரப்பப்பட்டதுடன் அதனால் சில பதவியணி அச்சந்தர்ப்பத்தில் நடவடிக்கைகளை அடிப்படையாக கொண்டு நிரப்புவதற்கு தேவை இருக்கும்வரை வெற்றிடமாகவிருந்தது. | செயற்திட்ட கண்காணிப்பு பிரிவின் வினைத்திறனான செயற்பாட்டிற்காக அலுவலர்களை வேலைக்கமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |